# ஊற்று



## தலைவர் உரை :

நமது பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில் கடந்த ஊற்று இதழில் குறிப்பிட்டிருந்தது போல பெங்களூர் பெரு மாநகராட்சியில் வெற்றி பெற்ற தமிழ் உறுப்பினர்களுக்கு நடத்திய பாராட்டுவிழாவில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் பாராட்டை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு அவர்கள் கட்சியில் தங்களை உயர்த்திக்கொண்டு அடுத்து வருகிற சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளராக நிற்க தகுதி படைத்தவர்களாகத் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். பெங்களூர்த் தமிழ்ச் சங்கமும், இங்குள்ள தமிழ் / தமிழர் அமைப்புகளும் உறுதுணையாக இருக்கும். அடுத்த ஆண்டில் ஒரு பெரும் மாநாட்டை நடத்தி நம்முடைய ஒற்றுமையையும் வலிமையையும் நாம் காட்ட அவர்கள் நம்மோடு சேர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம்.

அடுத்து தமிழ்ச் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களை மொழிபெயர்த்து நமது பெங்களூர்த் தமிழ் சங்கத்தின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும் வகையில் சிறப்பாகச் செயல்பட்ட தமிழ்-கன்னடப் பேராசிரியர்ப் பெருமக்களுக்கும், ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் இரா. சீனிவாசன் அவர்களுக்கும், நடத்திய பாராட்டு விழாவில் கலந்துகொண்டு, பேராசிரியர்களைப் பாராட்டிய கன்னடம் மற்றும் பண்பாட்டு இயக்கத்தின் இணை இயக்குநராகப் பணியாற்றி இப்போது சந்தகவி கனகதாசர் ஆய்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றி வரும் கன்னடர் அறிஞர் கா.த.சிக்கண்ணா அவர்கள் தன்னுடைய சிறப்புரையின்போது சங்கத்தின் பணிகளை வெகுவாகப் பாராட்டியதோடு, சங்கம் ஏற்றுக்கொள்ள முன்வந்தால் கன்னட இலக்கியங்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்யும் பணியை வழங்க ஆவண செய்வதாக உறுதி அளித்தார். அவருக்கு நம் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்.

தமிழ்நாட்டில் தமிழ்ப் படைப்பாளிகள் சங்கத்தைத் துவக்கி அதன் நிறுவனத் தலைவராகச் செயல்பட்டு வரும் கவிஞர் சுடர் முருகய்யா அவர்கள் தமிழகக் காவல்துறையில் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார். தமிழின் மீது அவர் கொண்ட காதலால் காவல்துறை பணியை உதறிப் பல படைப்புகளை நூல்களாகத் தொடர்ந்து வெளியிட்டு வருவதுடன், பல படைப்பாளர்களைத் தொடர்ந்து தேர்ந்தெடுத்துப்

பாராட்டி மகிழ்கிறவர். சிறந்த இன உணர்வாளர். நமது சங்கத்தோடு கடந்த 5 ஆண்டுகளாக ஆண்டுதோறும் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து கவிஞர்கள், படைப்பாளர்கள், சொற்பொழிவாளர்கள், ஆசிரியர்கள் எனப் பலரையும் அழைத்து வந்து நம்முடன் இணைந்து இலக்கியப் பெருவிழா இங்கு நடப்பதற்குப் பெரிதும் காரணமாக உள்ளவர். அவர் தமிழ்நாட்டில் தமிழர் எழுச்சிக் கழகம் என்ற அமைப்பைத் துவங்கி இளைஞர்களைத் திரட்டி சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். நவம்பர் 1ஆம் தேதி இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நாளை கன்னடம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்கள் சிறப்பாகக் கொண்டாடி வருவதை நாம் அறிவோம். ஆனால் தமிழ்நாட்டில் அதைப்பற்றி யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. இன்னமும் திராவிடம் என்னும் மாயையில் உள்ளனர். தமிழ்நாட்டின் வரலாற்றை, கலை, பண்பாட்டை இளைஞர்கள் அறிந்து கொள்ளும் வகையில் நவம்பர் 1ஆம் நாளை தமிழ்நாடு என்ற மாநிலம் உருவான நாளாகக் கொண்டாடவேண்டும் என்று சென்னையில் விழா ஏற்பாடு செய்து என்னைத் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று இரு திங்களுக்கு முன்பே கூறி ஒப்புதல் பெற்றிருந்தார். நானும் பொருளாளர் சம்பத் அவர்களும் சென்னை சென்று விழாவில் கலந்து கொண்டோம். மிகச் சிறப்பாக நடந்த விழாவில், மாந்த உரிமைப் போராளி, பிரபா கல்விமணி அவர்களுக்கும், திருமிகு முனைவர் தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கும், குமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு இணைய போராடிய திரு சேக் அப்துல்லா அவர்களுக்கும், விருது வழங்கிச் சிறப்புச் செய்தனர். விழாவில் பல ஆய்வாளர்கள் கலந்து கொண்டு சிறப்பாக உரையாற்றினர். காவல்துறையில் பணியாற்றிய திருமிகு. இராமநாதன் ஐ.பி.எஸ். அவர்கள் ஆற்றிய உரை மிகமிகச் சிறப்பாக அமைந்தது. இந்த நாட்டில் ஊடகங்களும் உளவுத்துறையும் எவ்வாறு உண்மைக்குப் புறம்பாகத் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தி முழுக்க ஒரு நிலையைத் திசை திருப்புகிறார்கள் என்பதை அவர் ஆதாரத்துடன் கூறியபோது வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. அவரை இங்கு வந்து சிறப்புரை ஆற்ற அழைத்துள்ளோம்.

கடந்த ஊற்று இதழில் குறிப்பிட்டவாறு இந்த இதழில் விதிமுறை மாற்றத்திற்கு உரிய நோக்கங்களையும், சங்கத்தின் கடந்த ஆறு ஆண்டுகளின் சிறப்பான வளர்ச்சியில் முகாமையான சிலவற்றையும் வெளிப்படுத்தி உள்ளோம். இப்பெரும் சாதனைகளை புதிதாக நன்கொடைகளையும் பல வகைகளில் வருவாயைப் பெருக்கியும் செய்திருக்கிறோம் என்பது மிகமிக மனநிறைவை அளிக்கக்கூடிய சாதனை. சங்கத்தின் வளர்ச்சியில், செயல்பாடுகளில் மிகவும் ஆர்வம் கொண்டு உறுதுணையாக இருந்துவரும், உறுப்பினர்களும், சான்றோர் பெருமக்களும் இப்போதைய பொறுப்பாளர்களின் பணிகளைப் பெரிதும் பாராட்டித் தொடர்ந்து தங்கள் ஆதரவை அளித்து வருகிறார்கள். ஆனால் மிகச் சிறிய எண்ணிகையில் உள்ள சிலர்

உண்மையான சங்கத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல் வளர்ச்சிக்குத் தங்களின் பங்களிப்பை இம்மியளவும் செய்யாமல், பொய்களையும், புரட்டுகளையும் பரப்புவதே தங்களின் முழுநேரப் பணியாகச் செய்து வருகிறார்கள். தவறுகள் இருக்குமாயின் அதனைத் தக்க ஆதாரத்துடன் எடுத்து வைக்கத் திராணியற்றவர்கள், பொய்களையே அறிக்கையாக வெளியிட்டு உள்ளார்கள். அந்த அறிக்கையிலும் தங்களின் பெயர், முகவரி, உறுப்பினர் எண் போன்வற்றை வெளியிடும் துணிச்சல் அற்ற இவர்களை என்னவென்று சொல்வது? சங்கத்தின் தொடர்ந்த 65 ஆண்டு கால வரலாற்றில் நிதி ஆதாரத்தைப் பெருக்க ஒரு சிறு அளவில் கூடத் தங்கள் பங்களிப்பைச் செய்ய இயலாத இத்தகையோர்தான் இதுபோன்ற பொய் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். இது எந்தவிதத்திலும் சங்கத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்காது. இவர்களைப் பற்றி நாம் சொல்லி உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. சங்கத்தின் நலனில் ஒரு சிறு துளியாவது இவர்களுக்கு அக்கரை இருக்குமானால் இதுபோன்ற செயல்களை நிறுத்திக் கொண்டு ஓரளவிற்காகவது சங்கப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன் வரவேண்டும். இதனையே நாம் கடந்த ஆண்டு தேர்தல் முடிந்த பின்னரும் தெரிவித்தோம். இனியாவது இவர்கள் திருந்துவார்களா?

**கோ.தாமோதரன்,** தலைவர்

## இமயம் தொலைக்காட்சி - பட்டிமன்றம்

18-10-2015 ஞாயிறன்று நடைபெற்ற திருமணமேடை நேர்காணல் நிகழ்ச்சிக்குச் சிறப்புச்சேர்ப்பதற்காக பட்டிமன்றம் நடைபெற்றது. பெங்களூர்த் தமிழ் சங்கத் துணைச்செயலாளர் திருமிகு இராம சுப்பிரமணியன் நடுவராகப் பொறுப்பேற்க, **''குழந்தைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்பவர்கள் - பெற்றோர்களா? ஆசிரியர்களா?''** என்ற தலைப்பில் இரு அணியினர் வாதிட்டனர்.

**பெற்றோர்களே** என்ற அணியில் திரு. ஏ. செல்வநாதன், திருமதி. செல்வக்கனி, செல்வி. ஆர்.எம்.கீதா ஆகியோரும், **ஆசிரியர்களே** என்ற அணியில் திருமதி. காந்திமதி, அனிதா, சக்திவேல், ரம்யா ஆகியோர் வாதிட்டனர்.

சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கச் செயலாளர் வா.ஸ்ரீதரன், துணைத்தலைவர் தி.கோ.தாமோதரன், பொருளாளர் மு.சம்பத் துணைச் செயலாளர்கள் வா.கோபிநாத், பேரா.சு.கோவிந்தராசன், அமுதபாண்டியன், செயற்குழு உறுப்பினர் இராமசுப்பு ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சீரும் சிறப்புமாகக் கேட்போருக்கு விருந்தளித்த இப்பட்டிமன்ற நிகழ்வை ஒவ்வொரு சனிக்கிழமை இரவு 8.30 முதல் 9.00 மணி வரை இமயம் தொலைக்காட்சியிலும் கண்டு களிக்கலாம்.**